செ.வெ.எண்:18 நாள்: 09.09.2020

**அரியலூர் மாவட்டம்**
**மாளிகை மேட்டில் அகழ்வாய்வு பணிகள் மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து தொல்லியல் துறை ஆணையர் திரு.த.உதயச்சந்திரன், இஆப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தலைமையில் நேரில் பார்வையிட்டார்கள்.**

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியத்திற்குட்பட்ட மாளிகைமேடு கிராமத்தில் 2020-21ஆம் ஆண்டு தொல் பொருள் அகழ்வாராய்ச்சிக்கான பணிகள் மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து முதன்மை செலயாளர் மற்றும் தொல்லியல் துறை ஆணையர் **திரு.த.உதயச்சந்திரன், இஆப.**, அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.**, அவர்கள் தலைமையில் இன்று (09.09.2020) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

அரியலூர் மாவட்டம், மாளிகைமேடு கிராமத்தில் சோழப் பேரசர்களால் 1000 ஆண்டுகளுக்கு முன் கங்கைகொண்ட சோழன் மாளிகை, முடிகொண்டசோழன் மாளிகை, சோழ கேரளன் மாளிகை ஆகிய அரண்மனைகள் கட்டப்பட்டுள்ளன. இந்த அரண்மனையில் முதலாம் இராஜேந்திரசோழன், முதலாம் இராஜாதிராஜன், இரண்டாம் இராஜேந்திரசோழன், வீர இராஜேந்திரசோழன், முதலாம் குலோத்துங்கசோழன் ஆகிய மன்னர்கள் இங்கு தங்கியிருந்தபோது அரசாணைகள் பிறபிக்கப்பட்டுள்ளது. மேலும், கி.பி 1031, 1047, 1053, 1059, 1068, 1070, 1119 ஆகிய காலக்கட்டங்களில் அரண்மனையில் அரசோச்சிய அரசர்கள் பற்றிய குறிப்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தொல்லியத்துறை மூலம் 1980, 1981, 1985, 1987, 1990-91 ஆகிய ஆண்டுகளில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சியின்போது செங்கற்களால் கட்டப்பட்ட அரண்மனை சுவர்கள், இரும்பு ஆணிகள், தந்த்ததினாலான பொருட்கள், வண்ண வளையல்கள், சீன வேலைப்பாடுகள் அமைந்த மண்பாண்டங்கள் ஆகிய கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மேலும், அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட பலங்கால கற்சிலைகள் இங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றை ஆய்வு செய்த தொல்லியல் துறை ஆணையர் அவர்கள் பொதுமக்கள் அதிக அளவில் இவற்றை பார்த்து செல்லும் வகையில் கூடுதல் வசதிகளையும் ஏற்படுத்தி தர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தை பார்வையிட்ட தொல்லியல் துறை ஆணையர் அவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த பழங்கால மக்கள் பயன்படுத்திய பொருட்கள் வால் உள்ளிட்ட கத்தி உள்ளிட்ட போர் ஆயுதங்கள், கற்கலால் ஆன ஆயுதங்கள் பூஜை பொருட்கள், சுவாமி கற்சிலைகள், சுடுமண்ணால் ஆன பாணைகள், பொம்மைகள், சீன நாட்டைச் சேர்ந்த உடைந்த பாணை துண்டுகள், விலங்குகளின் கல் உயிரிகள், 11ஆம் நூற்றாண்டை சேர்ந்த கட்டுமான பணிகளுக்காக பயன்படுத்திய செங்கற்கள், இரும்பு ஆணிகள் உள்ளிட்டவைகளை பார்வையிட்ட தொல்லியத்துறை ஆணையர் அவர்கள் கங்கைகொண்ட சோழபுரம் சுற்றியுள்ள பகுதிகளில் அகழ்வாராய்ச்சி பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள எனவும், இதன் மூலம் கீழடி, ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் அகழ்வாராய்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது போல் இங்கும் அகழ்ஆய்வ பணிகள் மேற்கொள்ளப்பட்டு தமிழர்களின் தொன்மை வெளி உலகத்திற்க கொண்டு வர தமிழக அரசுக்கு பரிந்துரை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தொல்லியல் துறை ஆணையர் **திரு.த.உதயச்சந்திரன், இஆப.**, அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்தஆய்வின்போது, துணை இயக்குநர் (தொல்லியல் துறை) முனைவர்.சிவானந்தம், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னூலாப்தீன், கோட்டாட்சியர் பூங்கோதை, வட்டாட்சியர்கள் சந்திரசேகரன் (அரியலூர்), கலைவாணன் (ஜெயங்கொண்டம்) மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**